# தாழ்வில் நினைத்தவர்

வாசிக்க 1 சாமுவேல் 2:1-10

***"கர்த்தர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்" (1 சாமு 2:8)***

ஆபிரகாம் லிங்கன் சிறுவனாயிருக்கையில் மிகவும் எளிமையிலிருந்தார். ஒரு நாள் திருமறை அவர் கையில் கொடுக்கப்பட்டது. தெரு விளக்குகளின்கீழ் நின்று அதை விருப்பமாய் வாசித்தார். ஆடுகளை மேய்த்த தாவீதை அரசனாக்கின தேவன் தன்னையும் உயர்த்துவார் என்று நம்பினார். அப்படியே அவரை அமெரிக்க நாட்டின் தலைவராக்கினவர் நம் தேவன்!

தாவீது தனது வீட்டாரால் அற்பமாய் எண்ணப்பட்டவன். ஆனால் கடவுள் அவனை இஸ்ரவேலரின் அரசனாக முடிசூட்டினார். கர்த்தர் அவனிடம், "நீ என் மக்களுக்கு அதிபதியாயிருக்கும்படி, ஆடுகளின் பின்னே நடந்த உனக்கு ... உலகிலிருக்கிற பெரியோர்களின் பெயர்களுக்கு ஒத்த பெரிய பெயரை உண்டாக்கினேன்" என்றார் (2 சாமு 7:8,9). ஆட்டிடையன் ஆளுநனானான்!

தாயும் தந்தையும் இல்லாத அனாதைப் பெண் எஸ்தர். அழகானவள். அவளது பெரியப்பா மகன் மொர்தெகாய் அவளை எடுத்து வளர்த்தான். கடவுளுக்குப் பயந்தவளாகிய அவள் எல்லாக் காரியத்திலேயும் மொர்தெகாயின் சொல்கேட்டு நடந்துவந்தாள். வஸ்தி என்ற இராணிக்குப் பதிலாகப் பட்டத்து ராணியாவதற்கு எத்தனையோ பேர் போட்டிபோட்டுக்கொண்டு வந்தார்கள். ஆனால் "அரசன் எல்லாப் பெண்களையும்விட எஸ்தர்மேல் அன்புவைத்தான்" (எஸ்தர் 2:17). அனாதைப் பெண்ணை அரசியாக்கினவர் நம் தேவன்!

எரிச்சலால் சொந்த சகோதரரால் விலைபேசப்பட்ட யோசேப்பு அநியாயமாய்ப் போத்திபாரின் மனைவியால் சிறைக்குள் தள்ளப்பட்டான். வேளை வந்தது; மேகங்கள் கலைந்தன; ஆசீர் மழை பொழிந்தது; சிறைக்கைதியும் அடிமையுமானவன் சிங்கா சனத்திற்கு உயர்த்தப்பட்டது நம் தேவனாலே!

அக்கிரமங்களிலும் பாவங்களிலும் செத்துக் கிடந்த நம்மைக் கடவுள் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் மீட்டு "நம்மிடம் அன்புகூர்ந்து... நம்மை அரசர்களும் ஆசாரியர்களுமாக்கினார்" (வெளி 1:6).

மகிமையினாலும் கனத்தினாலும் நம்மை முடிசூட்டின தேவன் அவரது கரத்தின் செயல்களின் மேல் நமக்கு ஆளுகையும் தந்திருக்கிறார் (சங் 8:5,6). நன்மை யினாலும் கிருபையினாலும் நம்மை முடிசூட்டின கர்த்தர் "கிறிஸ்துவுக்குள் உன்னத தங்களில் சகல ஆன்மீக ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" (எபே 1:3). மன்னாதி மன்னனாகிய அவரது மணப்பெண்ணாகிய நம்மை இரட்சிப்பின் ஆடையினாலும், ஆவியின் கனிகளாகிய நகைகளாலும் அலங்கரித்திருக்கிறார்.

நம் தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதிப்போம்! (சங் 136:23). தாவீதைப் போல, "கர்த்தராகிய ஆண்டவரே, நீர் என்னை இதுவரை கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் குடும்பமும் எம்மாத்திரம்?" என்போம்! (2 சாமு 7:18).

*இத்தனை மகத்வமுள்ள பதவி இப்புழுக்களாம் எங்களுக்கு;*
*எத்தனை மாதயவு நின் கிருபை எத்தனை ஆச்சரியம்!*

*(The Pentecostal Mission)*